**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை – திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை**
திருவள்ளுராண்டு 2055, குரோதி வருடம், பங்குனி மாதம் 04–ம் நாள்
2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ஆம் நாள் புதன்கிழமை.
**TNMY 03 - 000477 -2025**
**அசல் வழக்கு எண்.89/2025**

R. மனோகரன். ...வாதி

/எதிர்/

E. அமுதா. ... பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 02.06.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு, 05.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு,T.விஜயகுமார், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததாலும் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு 04.02.2026 ஆம் தேதி வாதி தரப்பு சாட்சி விசாரிக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்,

**தீர்ப்புரை**

பிரதிவாதி, வாதிக்கு தாவா தொகையான ரூ.1,22,000/–யும், அதற்குரிய பின் வட்டியையும், செலவுத் தொகையும் கொடுக்க உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி வழக்குரையின் சுருக்கம்**

பிரதிவாதி கடந்த 26.07.2023 அன்று கடனாக வாதியிடம் இருந்து ரூ.1,00,000/– ரொக்கமாக பெற்றுக் கொண்டு அன்றைய தினமே பிரதிவாதி வாதிக்கு ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகையை 12 சதவீத வட்டியுடன் திருப்பி தருவதாக ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி தொகையை வாதி பலமுறை பிரதிவாதியிடம் கேட்டபோது வீண் காலதாமதம் செய்து வந்துள்ளார். இறுதியாக 29.04.2025 அன்று கடன் தொகை மற்றும் அதற்கான வட்டியும் திரும்ப செலுத்த கோரி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார். பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு எந்த பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை, தொகையும் செலுத்தி வைக்கவில்லை, பிரதிவாதி தாவா கடன் தொகையை திருப்பிக் கொடுக்காமலும் வீண் காலதாமதம்

செய்து வந்ததினால் வாதி கடனுறுதிச்சீட்டு தொகை கிடைக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி வழக்கின் அடிப்படையில் பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டு அதனை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததாலும் தோன்றா தரப்பினராக கருதப்படுகிறார். வாதி தரப்பில் இவ்வழக்கின் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு:-</u>

5. வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் சான்றாவணங்களாக 26.07.2023 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட புரோ நோட் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 29.04.2025 தேதியிட்ட வாதியால் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், வாதி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான கணினி வழி பதிவிறக்கம் நகல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

6. மேற்படி முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை ஆராய்கையில் வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்து வாதியிடம் பிரதிவாதி 26.07.2023 அன்று கடனாக ரூ.1,00,000/- ரொக்கமாக பெற்றுக் கொண்டு அதற்காக புரோநோட் ஒன்று எழுதிக்கொடுத்துள்ளார் என்பதையும், அதன் பின்னர் பிரதிவாதி கடனுறுதிச்சீட்டின்படி வட்டியுடன் திரும்பி தரவில்லை என்பதால் தாவா தொகையை திரும்பி தர கேட்டு வாதி அவருக்கு வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பிய பிறகும், தாவாதொகை தரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வா.சா.1 சாட்சியம் முன்வைத்துள்ளதையும் பார்க்கையில் தாவா தொகை வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து சேர வேண்டியுள்ளது என்பதை அறிய முடிகிறது. பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகி இவ்வழக்கை நடத்த முன்வராததாலும், வா.சா.1ன் சாட்சியமும், ஆவணங்களும் வாதியின் வழக்கினை

நிரூபிப்பதாக அமைந்துள்ளதால் வாதிக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு வாதிக்குரிய செலவுத் தொகையினை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும் இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

7. வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி, வாதிக்கு தாவா தொகையான ரூ1,22,000/-யும் மற்றும் அந்த கடனின் அசல் தொகையான ரூ.1,00,000/-க்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9 சதவீதம் வட்டியும், தீர்ப்புத்தேதியிலிருந்து தொகை செலுத்தும் வரை 6 சதவீத வட்டியும் சேர்த்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்து சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (18.03.2026) அவையறிய பகரப்பட்டது.

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.18 18:17:15 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

**<u>பின் இணைப்பு:-</u>**

<u>வாதி தரப்பு சாட்சிகள்-</u>

| | | |
|---|---|---|
| வா.சா. 1 – R.மனோகரன் | : | வாசாஆ1 முதல் வாசாஆ 3 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| வா.சா.2 – M.வெங்கட்ராமன் | | ஆவணங்கள் தாக்கல் இல்லை. |

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 26.07.2023 | பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட புரோ நோட். | அசல் |
| வா.சா.ஆ. 2 | 29.04.2025 | வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ. 3 | 30.04.2025 | பிரதிவாதி பெற்றுக்கொண்ட கணினி வழி பதிவிறக்கம். | நகல் |

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.18 18:17:30 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

முதன்மை சார்பு நீதிமன்றம்,
மயிலாடுதுறை.
நேரிய/வரைவு உத்தரவு
ஓ.எஸ். 89/2025
நாள்.18.03.2026.